# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் பாடுபொருள் மாற்றங்கள்

தொகுதி – II




பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் ஆர். மோகனதாஸ்

206. **மா. தினேஷ்வரன்** 1006
இக்காலத் தமிழில் புணர்நெறி மாற்றங்கள்

207. **மா. சத்யராஜ்** 1012
வினைக்கோட்பாடு: பாடுபொருள் கூறுகள்

208. **முனைவர் த. விஸ்வநாதன்** 1016
தமிழ்த்திரைப்பாடல்கள் முன்வைக்கும் மாற்று அழகியல்

209. **ச. தனசேகரபிரபு** 1021
"துயர்படும் கலைஞர்கள்" (யுகபாரதி கவிதைகளை முன்வைத்து)

210. **சா. யமுனாதேவி** 1026
காலந்தோறும் உரைநடை இலக்கியத்தின் பாடுபொருள் மாற்றம்

211. **முனைவர் ப. ஜெயபால்** 1031
பொருளிலக்கண மறுசீரமைப்பின் கோட்பாட்டுருவாக்கம்

212. **ஜீ. பாண்டியலட்சுமி** 1035
தேசாந்திரியில் எஸ். ராமகிருஷ்ணனின் ஆதங்கத்தின் அடையாளங்கள்

213. **முனைவர் போ. அனு** 1040
பொருளாதார மேம்பாட்டில் பெண்கள்

214. **சு. லதா** 1045
நன்னூல் காட்டும் வினையியல்

215. **மா. கார்த்திகேயன்** 1051
துயிலெடை நிலையில் பாடுபொருள் மாற்றம்

216. **முனைவர் கோ. ஜெகதீஸ்வரி** 1056
பரணர் பாடல்களில் பாடுபொருள் வெளிப்பாடு

217. **முனைவர் ஸ்ரீ. ஸ்ரீஜெயந்தி** 1060
சிறுபாணாற்றுப்படை காட்டும் வாழ்வியல் கூறுகள்

218. **சி. கல்பனா** 1066
சேக்கிழாரின் சமூகப் பணிகள்

219. **முனைவர் சி. கவிதா** 1071
காரைக்கால் அம்மையார் படைப்புகளில் பாடுபொருள் கூறுகள்

220. **மு. அனில்குமார்** 1076
கார்நாற்பது காட்டும் பாடுபொருள் மாற்றங்கள்

221. **முனைவர் பு. பிரபுராம்** 1081
சிற்பியின் 'காலம்' கவிதையில் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு

222. **முனைவர் வெ. சுகந்தா** 1085
புதுக்கவிதைகளில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

# 222. "புதுக்கவிதைகளில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு"



**முனைவர் வெ. சுகந்தா**
*இணைப்பேராசிரியர் & முதன்மையர்*
*தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

பூமியின் மேல் உயிரினங்கள் வாழும் தொகுதியே சூழல் மண்டலம் ஆகும். ஆறாவது அறிவு பெற்ற மனிதர்கள் தங்கள் வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக இயற்கை வளங்களைச் சுரண்டி சூழல் சமமின்மையைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றனர். சூழல் மண்டலம் குறித்த சரியான விழிப்பறிவு மக்களுக்கு இன்மையால் மானுட உயிர் வாழ்வு பல்வேறு வாழ்வு சிக்கல்களுக்கு ஆளாகி வருகின்றது. இதனால் உயிரினங்களின் அடிப்படை மூலாதாரங்களான ஐம்பெரும்பூதங்களும் நச்சுப் போர்வையாக உருமாறி வருகின்றன.

இத்தகைய காரணங்களினால் உலக மானுட சமூகமே தம்மை எதிர்நோக்கியுள்ள சூழல் மாசுபாடுகளை எதிர்த்துப் போராட வேண்டிய முக்கிய நிலையில் உள்ளது. சமூக விளைவான புதுக்கவிதைகளும் சுற்றுச்சூழல் சீர்கேடுகள் குறித்து பதிவு செய்து மக்களுக்கு விழிப்புணர்வு சிந்தனைகளை வழங்கி வருவதை இக்கட்டுரை கருதுகோளாக்குகிறது.

## நாகரிக வாழ்வு - விளைவு

நம் முன்னோர்கள் இயற்கை சார்ந்த வாழ்வியலை அமைத்துக் கொண்டனர். கால மாறுதல்களின் சுழற்சியில் இயற்கை வாழ்வு அழிந்துபோய் செயற்கை வாழ்வு தலையெடுக்க ஆரம்பித்தது. இதனால் மானுட வாழ்வில் சிக்கல்களும், வேதனைகளும் நோய்களும் உருவாயின.

கவிஞர் பாலா 'திண்ணைகளும் வரவேற்பரைகளும்' எனும் கவிதையில் முன்பெல்லாம் வீடுகளின் முன்புறம் திண்ணைகளும் மனித நேயமும் திளைத்து விளையாடியதையும், நேற்றைய திண்ணைகள் இன்றைய நாகரிக வாழ்வில் மறைந்துபோய் விட்டதையும் வேதனையுடன் பதிவு செய்துள்ளார்.

***"திண்ணைகள் இடித்து***
***வரவேற்பரை கட்டும் நண்பரே***
***நம் உள்வெளி நாகரிகத்தில்***
***வாழ்க்கை அலங்காரமாகிவிட்டது***
***மனிதம்தாம் மூளியாகி விட்டது"***

என்று செயற்கை வாழ்வின் வெளிப்பாடான வரவேற்பரைகளில்